நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 343 | 4 Pages | 5.7.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 343 | 4 பக்கங்கள் | 5.7.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்

ஜோ பைடனுக்கு மூளை பாதிப்பு நோய் உள்ளதாக தகவல்? பைடனுக்கு பதிலாக கமலா ஹாரிசை நிறுத்துங்கள்: அமெரிக்க மூத்த ஊடகவியலாளர் வலியுறுத்தல்

வாஷிங்டன், ஜூலை 5

அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் அதிபர் ஜோ பைடனுக்கு மூளை பாதிப்பு நோய் இருப்பதாகவும் ஆனால் இதை ஊடகங்கள் திட்டமிட்டு மறைப்பதாகவும் புகார் எழுந்துள்ளது. வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ள அமெரிக்க அதிபர் தேர்தலில் குடிய ரசு கட்சி வேட்பாளரான முன்னாள் அதிபர் டோனல் டிரம்ப்க்கு எதிராக ஜனநாயக கட்சியை சேர்ந்த அதிபர் ஜோ பைடன் மீண்டும் வேட்பாள ராக நிறுத்தப்பட்டு ள்ளார். ஆனால் கடந்த வாரம் அட்லாண்டாவில் நடைபெற்ற டோனல் டிரம்ப் உடனான நேரடி விவாதத்தில் ஜோ பைட னின் வாய் குலரல் மற்றும் தடுமாற்றங்கள் சொந்த கட்சியினரையே கவலை அடைய வைத்துள்ளன.

இந்நிலையில் அவருக்கு டிமெண்டியா எனப்படும் மறதி நோய் அல் லது மூளைபாதிப்பு நோய் இருப்பதாகவும் இதை ஊடகங்கள் மறைத்து விட்டதாகவும் பாக்ஸ் நியூஸ் செய்தி நிறுவனத்தின் முன்னாள் ஆசி ரியர் பரபரப்பு குற்றசாட்டை முன்வைத்துள்ளார். பைடனுக்கு பதிலாக தற்போது துணை அதிபராக உள்ள இந்திய ஆப்ரிக்க வம்சாவளியை சேர்ந்த கமலா ஹாரிஸை வேட்பாளராக நிறுத்துமாறு அவரை வலியு றுத்தியுள்ளார். இதே கருத்தை ஜனநாயக கட்சியின் மூத்த எம்.பியம் முன்வைத்துள்ளார். இதற்கிடையே அமெரிக்காவின் சி.என்.என் செய்தி நிறுவனம் நடத்திய வாக்கெடுப்பில் ஜோ பைடனை விட கமலா ஹரிசுக்கே பெரும்பாலானோர் வாக்களித்துள்ளனர்.

74000 பேர் பனிலிங்க தரிசனம்

ஜம்மு, ஜூலை 5

அமர்நாத்யாத்திரைதொடங்கி5நாட்களில்74000பேர்பனிலிங்கத்தை தரிசனம் செய்துள்ளனர். இந்த ஆண்டு அமர்நாத் யாத்திரை கடந்த 29ம் தேதி தொடங்கியது. 6வது நாளான நேற்று அதிகாலை 5725 பேர் கொண்ட குழு 256 வாகனங்களில் யாத்திரைக்கு புறப்பட்டு சென்றது. இவர்களில் 3211 பேர் பாஹல்காம் வழியாகவும், 2514 பேர் பால்டால் வழியாகவும் யாத்திரை மேற்கொள்கின்றனர். யாத்திரை தொடங்கி 5 நாட்கள் ஆன நிலையில், நேற்று முன்தினம் மாலை வரை மொத்தம் 74000 பேர் பனிலிங்கத்தை தரிசனம் செய்துள்ளனர்.

காக்கிநாடாவில் பரபரப்பு ஒய்எஸ்ஆர் காங். மாஜி எம்எல்ஏ கட்டிடத்தை இடித்த அதிகாரிகள்

திருமலை. ஜூலை 5

ஆந்திர மாநிலம் காக்கிநாடா முன்னாள் எம்.எல்.ஏ. துவரம்புடி சந்திரசேகர் ரெட்டிக்கு சொந்தமான கட்டுமானத்தில் உள்ள கட்டிடம் விதி மீறி அனுமதியின்றி கட்டப்பட்டதாக புகார் வந்தது.

அதன்பேரில் அந்த கட்டிடத்தை நகராட்சி ஊழியர்கள் நேற்று இடித்து தள்ளினர். இதனை தடுக்க வந்த முன்னாள் எம்.எல்.ஏ துவாரம்புடி சந்திரசேகர் அவரது ஆதரவாளர்களை போலீசார் இழுத்துச் சென்றனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

ஏற்கனவே முன்னாள் முதல்வர்ஜெகன் மோகனின் வீடு உள்ள தாடேபள்ளியின் இரும்பு வேலிகளை அகற்றிய கூட்டணி அரசு, மற்ற தலைவர்களின் சட்டவிரோத கட்டிடங்களை இடித்து வருகிறது.

தேர்தல் பிரசாரத்தின்போது காக்கிநாடாவில் பவன் கல்யாண் நான் ஆட்சிக்கு வந்தால் உங்களை நடுரோட்டில் வைப்பேன். உங்களின் விதிமீறல் கட்டுமானங்களை இடிப்பேன் என்று பேசினார்.

இன்றும் அதையே செய்தார் என்று இப்போது இந்த வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இம்மானுவேல் சேகரன் பிறந்தநாள் அரசு விழா முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தலைவர்கள் நன்றி

சென்னை, ஜூலை5

இம்மானுவேல் சேகரன் பிறந்த நாள், உள்ளூர் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று முதல் வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேர வையில் அறிவித்தார். அவருக்கு தேவேந்திர குல வேளாளர் சங்க தலைவர்கள் நேற்று நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர். இது குறித்து மக்கள் விடுதலை கட்சி நிறுவன தலைவர் முன்னாள் எம்எல்ஏ முரு கவேல்ராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''சாதிமறுப்பு, சாதி ஒழிப்பு களத்திலே போராடி உயிர்த் தியாகம் செய்த தியாகிகளின் தியா கச்சுடர் போற்றப்படுவது, முதல் வர் மு.க.ஸ்டாலினால் உயர்த்தி பிடிக்கப்படுவது ஒரு நெஞ்சுரமிக்க தீரச்செயல் என்று போற்றுகிறோம்.

தமிழகத்தில் வாழும் தேவேந்திர குல வேளாளர் சமுதாய மக்கள் சார் பாகவும் நன்றிகளை மீண்டும் தமி ழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று கூறியுள்ளார்.

தமிழர் விடுதலைக்களம் நிறுவன தலைவர் ராஜ்குமார் வெளியிட் டுள்ள அறிக்கையில், ''தியாகி இம் மானுவேல் சேகரனாரின் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவித்த முதல்வர்மு.க.ஸ்டாலினுக்குநன்றி தெரிவித்துக் கொள்கிறோம். முதல் வரின் முயற்சிக்கு நாங்கள் எப்போ தும் தோள் கொடுப்போம்'' என்று கூறியுள்ளார். அதேபோல, தேவேந் திரகுல மக்கள் இயக்கத் தலைவர் குமுளி ராஜ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பல ஆண்டுகளாக தேவேந்திர குல மக்கள் வைத்த கோரிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றியுள்ளார். அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம்'' என்று கூறி யுள்ளார்.

பொது சொத்துக்கு சேதம் விளைவித்ததாக தொடரப்பட்ட வழக்கு மாஜி அமைச்சர் பாலகிருஷ்ண ரெட்டிக்கு விதித்த 3 ஆண்டு சிறை தண்டனை ரத்து

சென்னை, ஜூலை 5

முன்னாள் அமைச்சர் பாலகி ருஷ்ணா ரெட்டிக்கு சிறப்பு நீதிமன் றம் விதித்த 3 ஆண்டுகள் சிறை தண் டனையை ரத்து செய்து ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. கடந்த 1998ம் ஆண்டு ஓசூர் அருகே பாகலூரில் நடைபெற்ற போராட்டத்தில் பேருந்துகள் மீது கல்வீசி தாக்குதல் நடத்தியதாக முந்தைய அதிமுக ஆட்சி காலத்தில் விளையாட்டுத் துறை அமைச்சராக பதவி வகித்த பாலகிருஷ்ணா ரெட்டி மீது வழக் குப்பதிவு செய்யப்பட்டது. மொத் தம் 108 பேர் மீது குற்றம் சாட்டப் பட்டிருந்த நிலையில், 16 பேரை குற்றவாளிகள் என்று அறிவித்து சென்னை எம்.பி, எம். எல்.ஏ.க்கள் மீதான வழக் குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் 2019 ஜனவரி 7ம் தேதி தீர்ப்பளித்தது. இவ்வழக் கில், பாலகிருஷ்ணா ரெட்டிக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை விதிக் கப்பட்டது.

இதையடுத்து, மக்கள பிரதிநித்துவ சட்டம் 1951ன் படி 2

ஆண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை விதிக்கப்பட்டதால் பாலகிருஷ்ண ரெட்டி தனது அமைச்சர் மற் றும் சட்டமன்ற உறுப் பினர் பதவியை இழந் தார். இந்த நிலையில், சிறப்பு நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து பாலகிருஷ்ண ரெட்டி சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தார். இந்த மேல் முறையீடு மனுக்கள்நீதி பதி ஜி. ஜெயச்சந்திரன் முன்பு விசா ரணைக்கு வந்தது.

அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில்ஜூன் 25ம் தேதி தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தார். இந்நிலையில் இந்த வழக்கில் நேற்று தீர்ப்பளித்த நீதிபதி ஜெயச்சந்திரன், சாட்சிகள் விசாரணை சரியாக நடைபெற வில்லை. இவர்தான் பேருந்தை சேதப்படுத்தினார் என்பதற்கு ஆதா ரங்கள் இல்லை. அதனால், பாலகி ருஷ்ணா ரெட்டிக்கு விதிக்கப்பட்ட சிறை தண்டனையை ரத்து செய்து தீர்ப்பளித்தார்.

வேப்பூர் சந்தை குத்தகை: ராதாகிருஷ்ணன் ரூ.66.7 லட்சத்திற்கு எடுத்தார்

கடலூர், ஜூலை 5

கடலூர் மாவட்டம் வேப்பூர் வெள்ளிக்கிழமை ஆட்டுச்சந்தை மற்றும் காய்கறி சந்தைக்கான வாராந்திர குத்தகைக்கான ஏலம் ஊராட்சி மன்ற தலைவர் மகேஸ் வரி திருஞானம் தலைமையில் நடைபெற்றது. இந்த ஏலத்தில் கொளப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன் என்பவர் 66 லட்சத்து 7000 ரூபாய்க்கு வாரச் சந்தையை குத்தகைக்கு எடுத்தார்.

ஏலத்தைத் தொடங்கி வைத்த ஊராட்சி மன்ற தலைவர் மகேஸ் வரி திருஞானம் பேசும்போது, "வேப்பூர் சந்தை தமிழ்நாட்டி லேயே மிகவும் பிரபலமான சந்தை களில் ஒன்றாகும். வியாபாரிகள் மற் றும் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சந் தையை மேம்படுத்துவதற்கு

ஊராட்சி மன்றம் முக்கியத்துவம் அளித்து வருகிறது.

இந்த ஏலத்தின் மூலம் சந்தைக்கு கிடைக்கும் வருமானத்தை சந்தை யின் மேம்பாட்டு பணிகளுக்கு பயன்படுத்துவோம்" என்றார். வாரச் சந்தையை 66.7 லட்சத்திற்கு எடுத்த ராதாகிருஷ்ணன் கூறுகை யில், "வேப்பூர் சந்தையில் வியாபா ரம் செய்வதில் எனக்கு நீண்டகால அனுபவம் உள்ளது. சந்தையை மேம்படுத்தவும், வியாபாரிகளுக்கும் பொதுமக்க ளுக்கும் சிறந்த வசதிகளை வழங்க வும் நான் திட்டமிட்டுள்ளேன்" என் றார்.

இந்த ஏலத்தின் மூலம் வேப்பூர் சந்தை மேலும் வளர்ச்சியடையும் என்றும், வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு மேம்பட்ட வசதி கள் கிடைக்கும் என்றும் எதிர்பார்க் கப்படுகிறது. இந்நிகழ்வில் துணைத் தலைவர் மஞ்சுளா, ஊராட்சி செயலாளர் தங்க வெங்க டேசன், வார்டு உறுப்பினர்கள், சேப்பாக்கம் ஊராட்சி செயலாளர் தங்க சரவணன் மற்றும் திரளான வியாபாரிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருத்துறைப்பூண்டியில் சிலம்பம் மற்றும் கராத்தேவில் உலக சாதனை நிகழ்வு

திருவாரூர் ஜூலை 05

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் முத் தூரஸ் கராத்தே ஸ்போர்ட்ஸ் அகா டமி மற்றும் செங்காந்தள் சிலம்பம் கலைக்கூடம் இணைந்து நடத்திய ஆரஞ்சு உலக சாதனை நிகழ்ச்சி மிக சிறப்பாக ஜூன் 30 ஆம் தேதி திருத் துறைப்பூண்டியில் நடைபெற்றது . முதலில் கராத்தே ஒரு மணி நேரம் பயிற்சி சாதனையும், இடைவிடா மல் இரண்டு மணி நேரத்திற்கு மேல் சிலம்பம் சுற்றி உலக சாதனை புரியும் நிகழ்ச்சியும் நடைபெற்றது .இதில் 700 க்கும் மேற்பட்ட மாண வர்கள் கலந்து கொண்டு உலக சாதனை செய்தனர். இந்த சாதனை

நிகழ்ச்சிக்கு ஆரஞ்சு உலக சாதனை நிறுவனர் மதன் குமார் தலைமை தாங்கினார், முத்தூரஸ் கராத்தே ஸ்போர்ட்ஸ் அகாடமி நிறுவனர் முத்துக்குமரன் வரவேற்புரையாற் றினார்.இந்த சாதனை நிகழ்வில் திருத்துறைப்பூண்டி நகர் மன்ற தலைவர் கவிதா பாண்டியன், உன் னால் முடியும் தம்பி நிறுவனர் கோவிந்தராஜ், விக்டரி மேல்நி லைப்பள்ளியின் தாளாளர் ராமலிங் கம், திருத்துறைப்பூண்டி வர்த்தக சங்க தலைவர் செந்தில்குமார் ஆகி யோர் முன்னிலை வகித்தனர். திருத் துறைப்பூண்டி காவல் துணை கண் காணிப்பாளர்சோமசுந்தரம்உள்பட பலர் கலந்து கொண்டனர்.

காதலுக்கு ஊழியர் மறுப்பு; கடையில் பெட்ரோல் குண்டு வீச்சு: சிறுவன், 3 பேர் கைது

திருச்சி, ஜூலை 5

திருச்சி மாவட்டம் தொட்டியம் தோளூர்பட்டியில் வசிப்பவர் ஞானசேகரன்(60). திருச்சிமாவட்ட மதிமுக துணை செயலாளரான இவருக்கு சொந்தமான வீட்டின் கீழ் தளத்தில் தொட்டியம் பாலசமுத்திரத்தை சேர்ந்த முருகானந்தம் (45) என்பவர் மளிகை கடை நடத்தி வருகிறார். அங்கு வேலை செய்யும் பெண்ணிடம் நேற்று முன் தினம் இரவு மூங்கில்துறையை சேர்ந்த சூரியா என்பவர் தன்னை காதலிக்குமாறு கூறி தகராறில் ஈடுபட்டுள்ளார். காதலிக்காவிட்டால் கழுத்தை அறுத்து போட்டு விடுவேன் என மிரட்டியதாக கூறப்படுகிறது.

இதுபற்றி அந்த பெண் புகார் கூறியதால் அதே பகுதியை சேர்ந்த ராஜதுரை என்பவர் வந்து சூர்யாவை அடித்து உதைத்துள்ளார். தப்பி ஓடிய சூர்யா, நண்பர்களுடன் பைக்கில் நள்ளிரவு 12 மணியளவில் மளிகை கடைக்கு வந்து, கடைமுன் 3 பெட்ரோல் குண்டுகளை அடுத்தடுத்து வீசியுள்ளார்.

அவை பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறின. தீப் பிடித்ததில் கடை வாசலில் இருந்த உப்பு மூட்டை, மின் மோட்டார் எரிந்து சேதமானது. கடையின்சுவரின்பூச்சுஉடைந்து விழுந்தது. சத்தம் கேட்டு ஞானசேகரன் வந்து தீயை அணைத்தார்.

புகாரின்படி தொட்டியம் போலீசார் நடத்திய விசாரணையில், பெட்ரோல் குண்டு வீச்சில் ஈடுபட்டது சூர்யா (24), அவரது அண்ணன் ஹரிபிரசாத் (25), நண்பர்கள் சுபாஷ் (28), பெரியதம்பி (30), 17வயது சிறுவன் என்பது தெரியவந்தது. இதையடுத்து சிறுவன் உட்பட 4 பேரை நேற்று மாலை போலீசார் கைது செய்தனர்.

குழந்தை இல்லாததால் விரக்தி: விஷ ஊசிபோட்டு கேரள தம்பதி தற்கொலை

நாகப்பட்டினம், ஜூலை 5

குழந்தை இல்லாததால் விரக்தியடைந்த கேரள தம்பதி வேளாங்கண்ணி விடுதியில் தற்கொலை செய்து கொண்டனர். கேரள மாநிலம் எர்ணாகுளம் கருகுட்டி மாவேலி ஹவுஸ் பகுதியை சேர்ந்தவர் ஆண்டோவர்கீஸ் (34). இவரது மனைவி ஜிஸ்மால்(29). திருமணமாகி 9 ஆண்டுகள் ஆகிறது. குழந்தைகள் இல்லை. இதற்காக பல இடங்களில் கடன் வாங்கி சிகிச்சை பெற்று வந்தனர். இதனால் கடன் தொல்லையும் ஏற்பட்டது. இந்நிலையில் வேளாங்கண்ணிக்கு வந்த தம்பதியர், அங்குள்ள தனியார் விடுதியில் அறை எடுத்து தங்கினர். அங்கு ஆண்டோ வர்க்கீஸ், எலி பேஸ்டை ஊசி மூலம் தனது உடம்பில் செலுத்தினார். இதில் மயங்கி விழுந்த அவரை நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு இறந்தார். இதையறிந்த மனைவி ஜிஸ்மால், மருத்துவமனையில் இருந்து வேளாங்கண்ணியில் தங்கி இருந்த அறைக்கு வந்து மீதம் இருந்த எலிபேஸ்டை ஊசி மூலம் உடலில் செலுத்தினார். விடுதி ஊழியர்கள், அவரை மீட்டு நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவரும் இறந்தார்.

லஞ்சம் வாங்கிய பண்ருட்டி நகராட்சி உதவியாளர் கைது

கடலூர், ஜூலை 5

பண்ருட்டி நகராட்சி உதவியாளர் கதிரவன் லஞ்சம் வாங்கிய போது கைது செய்யப்பட்டுள்ளார். வெங்கடேசன் என்றதுப்பு ரவு பணியாளரின் சம்பள நிலுவைத் தொகையை வழங்க லஞ்சம் வாங்கிய போது கைது செய்யப்பட்டுள்ளார். சம்பள நிலுவைத் தொகையை வழங்க ரூபாய் 5000 லஞ்சம் வாங்கிய போது உதவியாளர் கதிரவனை லஞ்ச ஒழிப்புத்துறை கூடுதல் கண்காணிப்பாளர் தேவநாதன் தலைமையிலான லஞ்ச ஒழிப்பு போலீசார் கைது செய்தனர்.

மதுரை மேலூரில் வீட்டின் பூட்டை உடைத்து 55 சவரன் நகை கொள்ளை

மதுரை, ஜூலை 5

மேலூர் அருகே மில்கேட் பகுதியில் செந்தில் என்பவர் வீட்டில் 55 சவரன் நகை கொள்ளையடிக்கப்பட்டது. வீட்டின் பூட்டை உடைத்து பீரோவில் இருந்த 55 சவரன் நகை ரூ.1.50 லட்சம் ரொக்கம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. வீட்டின் பூட்டை உடைத்து கொள்ளையில் ஈடுபட்ட மர்ம நபர்கள் குறித்து மேலூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இரட்டை கொலை வழக்கு : 3 பேருக்கு இரட்டை ஆயுள்

தூத்துக்குடி, ஜூலை 5

பெண் உள்ளிட்ட இருவரை கொலை செய்த வழக்கில் 3 பேருக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. தூத்துக்குடி மாவட்டம், சிவகளையை சேர்ந்த விக்னேஷ்ராஜா(26)வும், ஏரலை சேர்ந்த சங்கீதாவும் பழகி வந்துள்ளனர். இது தொடர்பாக சங்கீதாவின் சகோதரர் முத்துராமலிங்கம்(24), உறவினர்கள் முத்துசுடர்(23), அருணாசலம்(38) ஆகியோருக்கும் விக்னேஷ் ராஜாவுக்கும் கடந்த 17620ல் தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்துள்ளது.

இருப்பினும் சங்கீதாவுக்கு விக்னேஷ்ராஜாவை திருமணம் செய்து வைத்துள்ளனர். இதனை விக்னேஷ்ராஜாவின் பெற்றோர் ஏற்கவில்லை. இதனால் விக்னேஷ்ராஜா, மனைவியின் வீட்டில் வசித்து வந்தார். அப்போது அவர்களுக்குள் குடும்ப தகராறு இருந்து வந்துள்ளது. இதனால் விக்னேஷ்ராஜாவின் குடும்பத்தினர் அவரை மனைவி சங்கீதாவுடன் தங்கள் வீட்டுக்கு வருமாறும், 40 பவுன் நகைகள் வாங்கி வருமாறும் தெரிவித்துள்ளனர்.

இதையறிந்து ஆத்திரமடைந்த முத்துராமலிங்கம், முத்துசுடர், அருணாசலம் ஆகிய மூவரும் சிவகளை பஞ்சாயத்து அலுவலகம் அருகில் கடந்த 2.7.20 அன்று மாலை விக்னேஷ்ராஜாவை செல்போனில் அழைத்துள்ளனர். இதையடுத்து விக்னேஷ்ராஜா, அண்ணன் ஆத்திமுத்துவுடன் அங்கு சென்றுள்ளார்.

அப்போது முத்துராமலிங்கம் உள்ளிட்ட மூவரும் சேர்ந்து விக்னேஷ்ராஜாவை அரிவாளால் வெட்டினர். தடுக்க முயன்ற அருண்மகேஷ்(26) என்பவரையும் வெட்டினர். இதில் அவர் உயிரிழந்தார். பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்ற அவர்கள், விக்னேஷ்ராஜாவின் வீட்டுக்கு சென்று விக்னேஷ்ராஜாவின் தாய் முத்துப்பேச்சியை சரமாரியாக வெட்டிக் கொலை செய்து விட்டு தப்பினர்.

இதுகுறித்து ஏரல் போலீசார் வழக்கு பதிந்து முத்துராமலிங்கம் உள்ளிட்ட மூவரையும் கைது செய்தனர். இந்த வழக்கை தூத்துக்குடி 2வது கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி உதயவேலவன்விசாரித்து, முத்துராமலிங்கம், முத்துசுடர், அருணாசலம் ஆகிய 3 பேருக்கும் இரட்டை ஆயுள்தண்டனை விதித்து நேற்று தீர்ப்பு கூறினார்.

கோவை மருதமலை கோயில் அருகே காட்டு யானைகள் வருவதால் பக்தர்கள் எச்சரிக்கையாக இருக்க வனத்துறை அறிவுறுத்தியுள்ளது. மருதமலை கோயில் அருகே வந்த காட்டு யானையை வனத்துறையினர் வனப்பகுதிக்குள் விரட்டினர்.

ஈரோடு அருகே கைத்தறி சேலை விற்பனை கடையில் 25 சவரன் நகை கொள்ளை

ஈரோடு, ஜூலை 5

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே கைத்தறி சேலை விற்பனை கடையில் 25 சவரன் நகை, ரூ.10 லட்சம் கொள்ளையடிக்கப்பட்டது. இளங்கோ என்பவரின் கடைக்குள் புகுந்து நகை, பணத்தை கொள்ளையடித்த நபர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடையில் இருந்து சிசிடிவி ஹார்டு டிஸ்கை கொள்ளையர்கள் எடுத்துச் சென்ற நிலையில் விசாரணை தீவிரமாக நடந்து வருகிறது.

பள்ளியில் பிளஸ் 2 மாணவிக்கு தாலி கட்டிய சக மாணவன்: உடந்தையாக இருந்த 3 மாணவர்கள் சஸ்பெண்ட்

கரூர், ஜூலை 5

பிளஸ் 2 மாணவிக்கு பள்ளியில் மாணவன் தாலி கட்டி திருமணம் செய்த வீடியோ வைரலானது. இதற்கு உடந்தையாக இருந்த 3 மாணவர்கள்ஒருவாரம்சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். கரூர் மாவட்டம் தோகைமலை அருகே நாகனூரை சேர்ந்த 17 வயது சிறுமி, அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு படிக்கிறார். அதே வகுப்பில் படித்து வந்த மாற்று சமூகத்தை சேர்ந்த மாணவரை காதலித்ததாக தெரிகிறது. இந்த தகவல் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு பள்ளியின் தலைமை ஆசிரியர் இளங்கோவனுக்கு தெரிய வந்து, சிறுமியின் பெற்றோருக்கு தகவல் அளித்து கண்டித்து உள்ளார். பெற்றோரின்சமரசத்துக்கு பின்னர், அந்த சிறுமி மீண்டும் பள்ளிக்கு வந்து கொண்டு இருந்தார்.

இந்நிலையில் கடந்த மாதம் 27ம் தேதி வழக்கம் போல் பள்ளிக்கு வந்த மாணவியின் கழுத்தில், மாணவன் மஞ்சள் கயிறை தாலியாக கட்டி உள்ளார். பின்னர் செல்பி எடுத்து வாட்ஸ்அப்பில் பதிவு செய்ததார். திருமணம் செய்து கொண்ட படம் வைரலானது. மறுநாள் 28ம்தேதி தோகைமலை பஸ் நிலையத்தில் இருவரும் பேசிக்கொண்டு இருந்தனர். இதை பார்த்த அதே ஊரை சேர்ந்த உறவினர்கள் மாணவியின் பெற்றோருக்கு தகவல் கொடுத்தனர்.

பெற்றோர் மற்றும் உறவினர்கள் இதுபற்றி தோகைமலை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தனர். பின்னர் போலீசார் இருவரையும் காவல்நிலையம் அழைத்து வந்து விசாரணை நடத்தினர். அப்போது மாணவி, தான் காதலித்த மாணவனை திருமணம் செய்து கொண்டதாகவும், அவனுடன் செல்வதாகவும் தெரிவித்துள்ளார். பின்னர் அந்த மாணவிக்கு பெண் காவலர்களும், மாணவனுக்கு இன்ஸ்பெக்டரும் அறிவுரை வழங்கினர். தொடர்ந்து இருவரையும் அவர்களது பெற்றோர் களிடம் அனுப்பி வைத்தனர்.

இந்தநிலையில் கடந்த 29ம் தேதி இரவு 11.30 மணியளவில் வீட்டில் தூங்கி கொண்டு இருந்த மாணவி திடீர் என்று மாயமாகி உள்ளார். அதிர்ச்சி அடைந்த பெற்றோர் தேடி பார்த்தும் மாணவி கிடைக்கவில்லை. இதுதொடர்பாக தோகைமலை போலீசில் புகார் கொடுத்தனர். போலீசார் வழக்கு பதிந்து மாயமான மாணவியை தேடி வந்த நிலையில், திருச்சி தாயனூர் பகுதியில் மாணவனுடன் பதுங்கி இருந்தபோது இருவரையும் பிடித்து விசாரனை மேற்கொண்டனர். இதில் இருவரும் திருமணம் செய்தது தெரியவந்தது. இருவரும் சிறார்கள் என்பதால் உயர் அதிகாரிகளின் ஆலோசனைப்படி விசாரணைமேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் மாணவியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள், பள்ளியின் தலைமை ஆசிரியரை சந்தித்து மாணவியின் திருமணத்திற்கு உடந்தையாக இருந்த சக மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து உடந்தையாக இருந்த 3 மாணவர்களை நேரில் அழைத்து ஒரு வாரம் சஸ்பெண்ட் செய்து எச்சரித்து அனுப்பியுள்ளார்.

சீர்காழி காவல் நிலைய ஆய்வாளர் உள்ளிட்ட 7 போலீசார் கூண்டோடு மாற்றம்

மயிலாடுதுறை, ஜூலை 5

சீர்காழி காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர்கள் உள்ளிட்ட 7 போலீசார் கூண்டோடு மாற்றம் செய்துள்ளனர். ஆய்வாளர் சிவகுமார், எஸ்.ஐ.க்கள் அசோக்குமார், சீனிவாசன், எழுத்தர் குலோத்துங்கன் உள்ளிட 7 பேர் மாற்றம் செய்துள்ளனர். சீர்காழியில் சகோதரர்கள் மீது தாக்குதல் நடத்திய வழக்கில் மெத்தனம் காட்டியதால் மயிலாடுதுறை எஸ்.பி. நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆடுகளை கண்டுபிடித்து தரும்படி கிராமம் முழுவதும் போஸ்டர்கள்: சென்னை அருகே பரபரப்பு

திருவள்ளூர், ஜூலை 5

திருவள்ளூர் அருகே காணாமல் போன 2 ஆடுகளை கண்டுபிடித்து தரும்படி போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் சர்ச் தெருவை சேர்ந்தவர் கார்த்தி (எ) கார்த்திகேயன் (38). இவர் கடம்பத்தூரில் உள்ள கறிக்கடையில் வேலை செய்து வருகிறார். இவர் தனது வீட்டில் 10க்கும் மேற்பட்ட ஆடுகளை வளர்த்து வருகிறார். கடந்த 26ம் தேதி 2 ஆடுகள் காணாமல்போனது. பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. இதுகுறித்து கடம்பத்தூர் போலீசில் புகார் கொடுத்தார். ஆனால் இதுவரையிலும் ஆடுகளை கண்டுபிடிக்கமுடியவில்லை. இந்தநிலையில், காணாமல்போன தனது 2 ஆடுகளை கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்'' என்று காணாமல்போன 2 ஆடுகளின் போட்டோக்களுடன் கடம்பத்தூர், பேரம்பாக்கம், தண்டலம், பிஞ்சிவாக்கம், சத்தரை, மப்பேடு மற்றும் கீழச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் ஆங்காங்கே சுவர்களில் போஸ்டர்களை ஒட்டியுள்ளார். இது அந்த பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அவற்றை வேடிக்கை பார்த்து செல்கின்றனர்.

சமயபுரம் அருகே குப்பைத் தொட்டியில் பதுக்கி மது விற்ற 2 பேர் கைது

திருச்சி, ஜூலை 5

திருச்சி மாவட்டம் சமயபுரம் அருகே குப்பைத் தொட்டியில் வைத்து மது பாட்டில்களை பதுக்கி விற்பனை செய்த 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், கைது செய்யப்பட்ட 2 பேரிடம் இருந்து 100 மதுபாட்டில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பாஜக பெண் நிர்வாகி தற்கொலை முயற்சி அக்கட்சியின் மாவட்டச் செயலாளர் கைது

சென்னை, ஜூலை 5

சென்னையில் பாஜக பெண் நிர்வாகியை தற்கொலை முயற்சிக்குத் தூண்டியதாக அக்கட்சியின் மாவட்டச் செயலாளர் செந்தில் கைது செய்யப்பட்டார்.

ரயில் நிலையத்தில் கடை வைத்துத் தருவதாகக் கூறி ரூ.2.50 லட்சம் பெற்றுக் கொண்டு மோசடி செய்ததாக செந்தில் மீது பாஜக பெண் நிர்வாகி நவமணி புகார் அளித்துள்ளார். பணத்தை திருப்பித் தராததால் தூக்க மாத்திரையை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்ற நவமணி சிகிச்சை பெற்று வருகிறார்.

சென்னை அண்ணா பல்கலை.யில் குண்டு மிரட்டல்

சென்னை, ஜூலை 5

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மர்மநபரை கோட்டூர்புரம் போலீசார் தேடி வருகின்றனர். சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் 44வது பட்டமளிப்புவிழாநேற்று முன்தினம் கல்லூரி வளாகத்தில் உள்ள விவேகானந்தர் அரங்கில் நடந்தது. இதனால் பல்கலைக்கழக வளாகம் பரபரப்பாக காணப்பட்டது. இதற்கிடையே பல்கலைக்கழகத்திற்கு நேற்று முன்தினம் இரவு வந்த மின்னஞ்சலில் 'இன்னும் சற்று நேரத்தில் வெடிகுண்டு வெடிக்கும் என்றும், முடித்தால் காப்பாற்றி கொள்ளுங்கள்' என்று கூறப்பட்டிருந்தது.

இதனால் பதறியடித்த பல்கலைக்கழக ஊழியர்கள் கோட்டூர்புரம் போலீசாருக்கு தகவல் அளித்தனர். அதன்படி போலீசார் மற்றும் வெடிகுண்டு செயலிழிக்க செய்யும் நிபுணர்கள் மோப்ப நாய்கள் உதவியுடன் பல்கலைக்கழக வளாகம் முழுவதும் நள்ளிரவு சோதனை நடத்தினர். பல மணி நேரம் நடந்த சோதனைக்கு பிறகு இது வெறும் புரளி என தெரிய வந்ததால் ஊழியர்கள் நிம்மதி அடைந்தனர். இதைத்தொடர்ந்து பல்கலைக்கழக மின்னஞ்சலுக்கு வெடிகுண்டு மிரட்டல் செய்தி அனுப்பியவர் யார் என சைபர் க்ரைம் போலீசார் விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவத்தால் அண்ணா பல்கலையில் பரபரப்பு நிலவியது.

தொழிலாளி கொலை வழக்கில் 8 பேர் கைது

சென்னை, ஜூலை 5

புளியந்தோப்பில் சாவு மேளம் அடிக்கும் தொழிலாளி முருகன் நேற்று கொல்லப்பட்ட வழக்கில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வால்டாக்ஸ் சாலை பகுதியைச் சேர்ந்த சாவு மேளம் அடிக்கும் வேல்முருகன், சஞ்சய், கார்த்திக் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பிரபாகரன், பிரேம்குமார்,

அபிராஜ், விஜய், சூர்யா ஆகியோரையும் பேசின் பிரிட்ஜ் போலீஸ் கைது செய்தது.

பெண் விவகாரம், மூலக்கொத்தளம் சுடுகாட்டில் யார் செல்வாக்கான வர்கள் என காட்ட நடந்த மோதலில் கொலை நடந்துள்ளது.

காங்கேயம் அருகே அறநிலைய ஊழியருக்கு கத்திக் குத்து: தலைமறைவானவருக்கு போலீஸ் வலைவீச்சு

திருப்பூர், ஜூலை 5

காங்கேயம் அருகே சிவன்மலை சுப்பிரமணிய சுவாமி கோவில் ஊழியர் வேலுச்சாமிக்கு கத்திக் குத்து முன்விரோதத்தால் மாமனார் வேலுச்சாமியை கத்தியால் குத்திவிட்டு தலைமறைவான மருமகன் பிரபாகரனுக்கு போலீஸ் வலைவீசி வருகிறது. படுகாயமடைந்த வேலுச்சாமி, ஈரோடு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தலைமறைவான பிரபாகரன் வள்ளியரச்சல் ஊராட்சி முன்னாள் அதிமுக செயலாளராக இருந்தவர்.

சிவகாசி அருகே தடை செய்யப்பட்ட பட்டாசு ரசாயனம் பறிமுதல்

விருதுநகர், ஜூலை 5

சிவகாசி அருகேதாயில்பட்டியில் மகேந்திரன் என்பவரது பட்டாசு ஆலையில் தடை செய்யப்பட்ட 22 டன் ரசாயனம் பறிமுதல் செய்யப்பட்டது. தடை செய்யப்பட்ட பட்டாசு தயாரிப்பு மூலப் பொருளான 22 டன் பேரியம் நைட்ரேட் பறிமுதல் செய்யப்பட்டது. அனுமதியின்றி வைக்கப்பட்டிருந்த 455 மூட்டை பேரியம் நைட்ரேட் ரசாயனத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

எஸ்ஐக்கள் உள்பட 7 பேர் இட மாற்றம்

சீர்காழி, ஜூலை 5

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழிகச்சேரி ரோடு முக்கூட்டில் கடந்த ஜூன் 27ம் தேதி பட்டப்பகலில் மதன்குமார் (40), உறவினர் மணிகண்டன் (32) ஆகிய இருவரையும் மர்ம நபர்கள் அரிவாளால் சரமாரியாக வெட்டிவிட்டு தப்பினர். இதேபோல் மதன்குமார்சகோதரர்சுரேஷையும் (33) மர்மநபர்கள் இரும்பு பைப்பால் தாக்கியுள்ளனர். இச்சம்பவம் முன் விரோதம் காரணமாக நடந்த நிலையில் சீர்காழி போலீசார் கொலை முயற்சி வழக்கு பதிந்து 4 பேரை கடந்த 29ம் தேதி கைது செய்தனர். முக்கிய குற்றவாளியான அருண்குமார் (33), செந்தில்குமார் (34) ஆகிய 2 இரண்டு பேரையும் தனிப்படை போலீசார் கைது செய்தனர்.

இந்நிலையில் மயிலாடுதுறை எஸ்பி மீனா, பட்டப்பகலில் இரண்டு பேர் வெட்டப்பட்ட சம்பவத்தன்று பணியில் மெத்தனமாக இருந்ததாக சீர்காழி இன்ஸ்பெக்டர் சிவக்குமாரை நாகை ஆயுதப்படைக்கும், சப் இன்ஸ்பெக்டர் அசோக்குமாரை குத்தாலத்திற்கும், சப் இன்ஸ்பெக்டர் சீனிவாசனை மாவட்ட குற்றப்பிரிவுக்கும், காவலர் அகஸ்தியன், ஏட்டு குலோத்துங்கன், சிறப்பு எஸ்ஐக்கள் சதீஷ் குமார், ராஜாஜி ஆகியோரை மணல்மேடு காவல் நிலையத்திற்கும் பணி மாற்றம் செய்து உத்தரவிட்டார்.

மெட்ரோ ரயில் நிர்வாகத்திற்கு நிதியுதவி ஆசிய முதலீட்டு வங்கி பிரதிநிதிகள் மதுரையில் ஆய்வு

சென்னை, ஜூலை 5

மதுரை மற்றும் கோயம்புத்தூர் திட்டங்களுக்கு நிதியுதவி செய்வதில் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி விருப்பம் தெரிவித்ததுடன், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் குழுவுடன் இணைந்து மதுரையில் நேற்று, முதற்கட்ட ஆய்வை மேற்கொண்டது. இதனைத்தொடர்ந்து இன்று கோயம்புத்தூரிலும் பார்வையிட உள்ளது. சர்வதேச நிதியுதவி கோரி, தமிழ்நாடு அரசு ஏற்கனவே இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் ஒன்றிய அரசுக்கு திட்ட பரிந்துரைகளை அனுப்பியுள்ளது என மெட்ரோ நிர்வாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் அர்ச்சுனன், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் உயர் முதலீட்டு அலுவலர் வென்யுகு, தலைமை பொது மேலாளர் ரேகா பிரகாஷ் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

'அலைபாயுதே' பாணியில் காதல் திருமணம் தாய் வீட்டு சிறையில் வைத்ததால் சுவர் ஏறிகுதித்து தப்பிய இளம்பெண்:காதலனுடன் காவல் நிலையத்தில் தஞ்சம்

குலசேகரம், ஜூலை 5

குமரியில் அலைபாயுதே பட பாணியில், காதலனை திருமணம் செய்த இளம்பெண் குட்டு அம்பலமானதால் வீட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் தாயாரை ஏமாற்றி சுவர் ஏறி குதித்து தப்பிய இளம்பெண் பாதுகாப்பு கேட்டு காவல் நிலையத்தில் தஞ்சம் அடைந்தார்.

குமரி மாவட்டம் திருவட்டாரை அடுத்த சுவாமியார்மடம் காட்டுவிளையை சேர்ந்தவர் சுந்தரேசன். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார்.இவரதுமனைவி பிரேம குமாரி (58). இவர்களது மகள் அஸ்வதி (22). நர்சிங் முடித்து விட்டு, சுவாமியார்மடத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார். அஸ்வதிக்கும் திருவட்டார் அடுத்த வியன்னூர் பகுதியை சேர்ந்த ராஜேஷ் (25) என்பவருக்கும்காதல் இருந்து வந்தது. இது அஸ்வதி தாயார் பிரேம குமாரிக்கு தெரிய வந்தது. தனது மகளை கண்டித்த அவர், நான் பார்க்கும் மாப்பிள்ளையை தான் நீ திருமணம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டியுள்ளார்.

இதையடுத்து நெருங்கிய உறவு முறையில் உள்ள வாலிபரை அஸ்வதிக்கு திருமணம் செய்யும் ஏற்பாடுகளில் இறங்கினார். இந்நிலையில் கடந்த 19ம் தேதி தோழி ஒருவரை சந்திக்க செல்வதாக கூறி விட்டு வீட்டில் இருந்து வெளியே வந்த அஸ்வதி தோழிகள், நண்பர்கள் உதவியுடன் திருவட்டார் அருகே உள்ள கோயிலில் காதலன் ராஜேசை திருமணம் செய்து கொண்டார். பின் எதுவும் நடக்காதது போல் அவரவர்வீட்டுக்குசென்று விட்டனர். அலைபாயுதே

சினிமா பாணியில் காதலன் ராஜேஷ் கட்டிய தாலியை ஆடைக்குள் மறைத்தவாறு அஸ்வதி இருந்தார். 10 நாட்களுக்கு மேல் இவ்வாறு வீட்டில் இருந்தார்.

இந்நிலையில் 4 நாட்களுக்கு, முன் மகள் தூங்கி கொண்டிருந்த சமயத்தில் தாலியை பார்த்த பிரேமகுமாரி விசாரித்தபோது ரகசிய திருமணம் அம்பலமானது. இதனால் மகளை சரமாரியாக தாக்கி ஒரு அறையில் சிறை வைத்துள்ளார். 3 நாட்களாக அடைபட்டிருந்த அஸ்வதி, நேற்று முன்தினம் அதிகாலையில் தாயாரின் கவனத்தை திசை திருப்பி காம்பவுண்ட் சுவர் ஏறி குதித்து தப்பினார்.

வக்கீல் நண்பர் ஒருவர் உதவியுடன் திருவட்டார் காவல் நிலையத்தில் தஞ்சம் அடைந்தார். போலீசார் அஸ்வதியின் தாய் பிரேமகுமாரி, காதலன் ராஜேஷ் ஆகியோரை வரவழைத்து விசாரணை நடத்தினர். அப்போது பிரேமகுமாரி மகளை தன்னுடன் அனுப்பும்படி கூறி கதறினார். ஆனால் அஸ்வதி, ராஜேசை திருமணம் செய்துவிட்டேன், அவருடன் சேர்த்து வையுங்கள் என்றார். இதையடுத்து அஸ்வதியை போலீசார் ராஜேசுடன் அனுப்பி வைத்தனர்.

கனியாமூர் பள்ளி மாணவி மரணம் தொடர்பான கலவர வழக்கு இறுதி அறிக்கையை 4 மாதங்களில் தாக்கல் செய்ய வேண்டும்: சிறப்பு புலனாய்வு குழுவுக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூலை 5

கள்ளக்குறிச்சி, கனியாமூர் பள்ளி மாணவி மரணத்தை தொடர்ந்து நடந்த கலவரம் தொடர்பான வழக்கில் 4 மாதங்களில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யுமாறு காவல்துறைக்கு சென்னைஉயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் தாலுகா, கனியாமூரில் உள்ள தனியார் பள்ளி பிளஸ் 2 மாணவி, கடந்த 2022ம் ஆண்டு ஜூலை 13ம் தேதி பள்ளியின் மூன்றாவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில், 2022 ஜூலை 17ம் தேதி மாணவி மரணத்துக்கு பள்ளி நிர்வாகம் தான் காரணம் எனக் கூறி, பல்வேறு

அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்கள், பள்ளிக்குள் நுழைந்து அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை தீ வைத்து எரித்ததுடன், பொருட்களையும் திருடிச் சென்றனர். இந்த கலவரம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டது. இந்த நிலையில், இந்த வழக்கு விசாரணையை வேறு புலன் விசாரணை அமைப்புக்கு மாற்றக்கோரி பள்ளிதாளாளர் ரவிக்குமார், சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று மீண்டும் நீதிபதிஜி.ஜெயச்சந்திரன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது காவல்துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர், வன்முறை தொடர்பான வழக்கின் விசாரணை முறையாக நடந்து வருகிறது. திருடப்பட்ட பொருட்களில் குறிப்பிடத்தக்கவை மீட்கப்பட்டுள்ளன. வழக்கில் நான்கு மாதங்களில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று தெரிவித்தார். இந்த வழக்கில் 4 மாதங்களில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யுமாறு காவல்துறைக்கு உத்தரவிட்ட நீதிபதி, கலவரத்தின் போது பள்ளியில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களை மீட்கவும் விசாரணை அதிகாரிக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார். உத்தரவை மீறினால், பள்ளி நிர்வாகம், நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்யலாம் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் ஜிகா வைரஸ் தீவிர கண்காணிப்பு; மக்கள் அச்சம் கொள்ள தேவை இல்லை: பொது சுகாதாரத்துறை தகவல்

சென்னை, ஜூலை 5

தமிழகத்தில் ஜிகா வைரஸ் குறித்து தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதால் மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை எனபொதுசுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. மகாராஷ்டிராவில் இரண்டு கர்ப்பிணிகள் உள்பட 7 பேருக்கு ஜிகா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. ஜிகா வைரஸ் தொடர்பாக எச்சரிக்கையுடன் இருக்கும்படி அனைத்து மாநிலங்களுக்கும் ஒன்றிய சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில் தமிழ்நாட்டில் ஜிகா வைரஸ் குறித்து தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதாக பொதுசுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பொது சுகாதாரத்துறை இயக்குனர் செல்வவிநாயகம் கூறியதாவது:

ஜிகா வைரஸ் ஏடிஸ் வகை கொசு மூலம் பரவும், எனவே கொசு ஒழிப்பு பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக அந்தந்த மாவட்டத்தில் உள்ள சுகாதாரத்துறை அதிகாரிகள் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து இந்த பணியை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக 22,800 ஊழியர்கள் (domestic breeding checkers) பணியாற்றி வருகின்றனர். அதில் ஊரக பகுதிகளில் 11,705 பணியாளர்கள், நகர் பகுதிகளில் 11,095 பணியாளர்கள் தீவிரமாக கொசு ஒழிப்பு பணியில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

மேலும் வழக்கத்திற்கு மாறாக பாதிப்பு இருந்தால் அங்கு நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது வரை எந்த பாதிப்பும் இல்லை.தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. எனவே மக்கள் அச்சம் கொள்ள தேவை இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

கள்ளக்குறிச்சி விஷ சாராய வழக்கு விசாரணையை சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட தேவையில்லை: சென்னை ஐகோர்ட்டில் அரசு அறிக்கை தாக்கல்

சென்னை, ஜூலை 5

கள்ளக்குறிச்சி விஷ சாராய சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்பட்டு வருவதால் சிபிஐ விசாரணை தேவையில்லை என்று தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளது. கள்ளக்குறிச்சி விஷ சாராயம் தொடர்பான வழக்கை சிபிஐக்கு விசாரணைக்கு மாற்றக்கோரி அதிமுக வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஐ.எஸ்.இன்பதுரை, பாமக வழக்கறிஞர் கே.பாலு ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கு நேற்று பொறுப்பு தலைமை நீதிபதி ஆர். மகாதேவன், நீதிபதி முகமது ஷபிக் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனாவின் அறிக்கையை கூடுதல் அட்வகேட் ஜெனரல் ஜெ.ரவீந்திரன் தாக்கல் செய்தார்.

அந்த அறிக்கையில், "சம்பவம் தொடர்பான தகவல் கிடைத்தவுடன் மாவட்ட கலெக்டர் கள்ளக்குறிச்சி மருத்துவமனைக்கு நேரில் சென்று நடவடிக்கை எடுத்தார். மருத்துவமனைக்கு செல்லும் வழியில் சம்பவம் தொடர்பான வருவாய்த்துறையினர் உடனடியாக விசாரணை நடத்த மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டார். பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு, சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நேரில் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

விஷ சாராயத்தால் உயிரிழந்தவர்களுக்கு தலா ரூ.10 லட்சம் நிவாரணமும், சிகிச்சை பெற்று வருவதற்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரணமும் வழங்கி முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிட்டார். முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்பேரில் விசாரணை சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ளது. உடனடியாக விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டார். விழுப்புரம் மாவட்ட சிபிசிஐடி காவல்துறை இந்த சம்பவம் தொடர்பாக மூன்று வழக்குகளை பதிவு செய்துள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர், மதுவிலக்கு ஏடிஜிபி ஆகிய அதிகாரிகள் பணியிடமாற்றம் செய்யப்பட்டனர்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உட்பட 9 காவல்துறை அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். சம்பவம்தொடர்பாகசென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஆணையம் விசாரணை நடத்தி கள்ளச்சாராயத்தை தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து அறிக்கை அளிக்கவுள்ளது. இதுவரை சிபிசிஐடி காவல்துறை 132 சாட்சிகளிடம் விசாரித்து வாக்கு மூலங்கள்பதிவுசெய்யப்பட்டுள்ளன. சிபிசிஐடியின் 6 குழுக்கள் வேகமாக விசாரணை நடத்தித வருகின்றன. விசாரணை விரிவாகவும், துரிதமாகவும் நடைபெற்று வருகிறது. தமிழக டிஜிபி தலைமையில் அனைத்து காவல்துறை உயர் அதிகாரிகளும் தொடர்ந்து விசாரணையை கண்காணித்து வருகின்றனர்.

கடந்த 2023ம் ஆண்டு மரக்காணம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் நடைபெற்ற விஷ சாராய மரணங்கள்தொடர்பாக சிபிசிஐடி போலீசார் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக விசாரணை நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளனர். மரக்காணம் மற்றும் செங்கல்பட்டு சம்பவத்தில் 99.1 சதவீதம் மெத்தனால் இருந்தது கண்டறியப்பட்டது. தற்போது கள்ளக்குறிச்சியில் கைபற்றிய விஷ சாராயத்தில் 8.6 முதல் 29.7 சதவீதம் வரை மெத்தனால் கலந்துள்ளதாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கள்ளக்குறிச்சி சம்பவம் மரக்காணம் மட்டும் செங்கல்பட்டு சம்பவத்தின் தொடர்ச்சி என்று கூற முடியாது. கள்ளக்குறிச்சி விசை சாராய சம்பவம் தனி சம்பவம் ஆகும். கள்ளச்சாராய புகார்கள் தொடர்பாக மாவட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு சிறப்பு வாட்ஸ் அப் குழுக்கள் வழங்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளுக்கு வழங்கி வரும் மெத்தனால் கண்காணிக்கப்படுகிறது. கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகின்றது. அடிக்கடி திடீர் சோதனைகள் நடத்தி வருகிறார்கள்.

விஷ சாராய குற்றங்களில் ஈடுபடுவோர் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்படுகிறார்கள். மாநில அரசு இந்த சம்பவம் குறித்து கவனமாக விசாரித்து வருகிறது. தற்போது நிலைமை கட்டுக்குள் வந்துள்ளது. பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உரிய மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மாநில காவல் துறை விசாரித்து வரும் வழக்குகளை சிபிஐ விசாரணைக்கு மாற்ற அவசியம் இல்லை. சில அரிதான அல்லது விசாரணையில் முன்னேற்றம் இல்லாத வழக்குகளை மட்டுமே சிபிஐ விசாரணைக்கு மாற்ற கோர முடியும். இந்த வழக்கில் தமிழக காவல்துறை சிறப்பாக விசாரித்து வரும் நிலையில் சிபிஐ விசாரணை தேவையில்லை. இந்த வழக்கில் இதுவரை 10க்கும் மேற்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணை தொடங்கிய 5 நாட்களில் 21 தனிநபர்கள், 6 சில்லறை விற் பனையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 7 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 700 லிட்டர்மூலப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தில் புதிய திருத்தம் கொண்டு வந்து, கள்ளச்சாராய குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கான தண்டனையை ஆயுள்தண்டனை வரை அதிகரித்து சட்டம் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த சட்டத்தில் ஜாமீன் வழங்குவதற்கு கடுமையான நிபந்தனைகள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழக ஆளுநர் ஒப்புதல் கிடைத்தவுடன் விரைவில் புதிய சட்டம் அமலுக்கு வரும் எனவும் கூறியுள்ளார். கள்ளக்குறிச்சி விசச்சாராயத்திற்கு இதுவரை 65 பேர் மரணம் அடைந்துள்ளனர். 145 சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். உரிய முறையில் விசாரணை நடைபெற்று வருவதால் சிபிஐ விசாரணைக்கு மாற்ற தேவையில்லை. எனவே. இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை தொடங்கியவுடன், கூடுதல் அட்வகேட் ஜெனரல் ஜெ.ரவீந்திரன், வழக்கை தள்ளிவைக்க மாறு கோரினார். இதையடுத்து, விசாரணையை ஜூலை 11ம் தேதிக்கு தள்ளிவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். ★ சிபிசிஐடி போலீசார் விரிவாகவும், விரைவாக வும் விசாரணை நடத்துகிறார்கள். ★ விசாரணையில் முன்னேற்றம் இல்லாத வழக்குகளை மட்டுமே சிபிஐ விசாரிக்க கோர முடியும்.

அமைச்சர் சேகர்பாபு தலைமையில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனை

சென்னை, ஜூலை 5

2024 ஆகஸ்ட் 24, 25 ஆகிய நாட்களில் பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை தமிழ்நாடு அரசு முன்னின்று நடத்துகிறது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் சேகர்பாபு, அனைத்துல முத்தமிழ்முருகன்மாநாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து வருகைதரும் முருக பக்தர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு வசதிகள் ஏற்படுத்துதல், 2 நாள் மாநாட்டின் நிகழ்வுகள் மற்றும் கலை

நிகழ்ச்சிகளை உறுதிசெய்தல், சிறந்த ஆய்வுக் கட்டுரைகளை தேர்வு செய்யும் பணிகள், மாநாடு குறித்து விளம்பரப்படுத்தும் பணிகள், மாநாட்டு அரங்கங்களின் வடிவமைப்பு மற்றும் அறுபடை வீடு கண்காட்சிஅரங்குதொடர்பான பணிகள், மாநாட்டு வளாகத்தில் ஏற்படுத்தப்படும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள், மாநாட்டு விழா மலர் மற்றும் ஆய்வுக் கட்டுரை தயாரித்தல் போன்ற பணிகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

உரிய ஏற்பாடுகளை செய்ய இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் சந்திரமோகன், அறநிலையத்துறை ஆணையர் முரளீதரன் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு பேரவையில் நிறைவேற்றப்பட்ட நீட் விலக்கு தீர்மானத்திற்கு ஒப்புதல் தர வேண்டும்: திமுக எம்.பி. ராஜேஷ்குமார் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை5

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட நீட் தேர்வு விலக்கு தீர்மானத்திற்கு ஒப்புதல் வழங்க வேண்டும் என திமுகநாடாளுமன்றஉறுப்பினர் ராஜேஷ்குமார் வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து மாநிலங்களவையில் அவர் பேசியதாவது: நீட் தேர்வை பொருத்தவரை ஆரம்ப காலம் முதலே திமுக எதிர்த்து வருகிறது. நீட் தேர்வின் பாதிப்பால் தமிழ்நாட்டில் மாணவி அனிதா தொடங்கி சதீஷ்குமார் வரை, 22 மாணவ, மாணவிகள் தங்கள் இன்னுயிரை இழந்துள்ளனர். நீட் தேர்வு விலக்கு..எங்கள் இலக்கு என்று கூறி தமிழக விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கடந்தாண்டு அக்டோபர் மாதம் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கினார். இதற்கு தமிழ்நாட்டில் 1.10 கோடி பேர், நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்திட்டு தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

இந்த நீட் தேர்வால் பயிற்சி மையங்கள் நடத்தக் கூடியவர்களே அதிக பயன் பெறுகிறார்கள்.

ஒவ்வொரு மாணவரும் நீட் தேர்வு பயிற்சிக்கு செல்ல ஆண்டொன்றுக்கு ரூ.4 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை செலவு செய்ய வேண்டிய நிலை உள்ளது. குறிப்பாக கிராமப்புற அரசுப் பள்ளி மாணவர்கள் நீட் தேர்வால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் தான் திமுக சார்பில் நீட் தேர்வுக்கு எதிராக தொடர்ச்சியாக போராடி வருகிறோம். நீட் தேர்வுக்கு விலக்கு கோரி சமீபத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒன்றிய அரசுக்கு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒன்றிய அரசு, நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். தமிழ்நாட்டில் 1.10 கோடி பேர், நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்திட்டு தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

ரூ.100 கோடி நிலம் அபகரிப்பு வழக்கு மாஜி அமைச்சர் முன்ஜாமீன் மனு தீர்ப்பு

கரூர், ஜூலை 5

ரூ.100 கோடி நிலம் அபரிப்பு வழக்கில் தொடர்ந்து தலைமறைவாக இருந்து வரும் அதிமுக முன்னாள் அமைச்சர் இடைக்கால முன்ஜாமீன் கேட்டு தாக்கல் செய்த மனு மீது கரூர் நீதிமன்றம் இன்று தீர்ப்பு அளிக்கிறது. கரூர் மாவட்டம் வாங்கல் குப்பிச்சிபாளையத்தை சேர்ந்த பிரகாஷ் என்பவர், ரூ.100 கோடி மதிப்பிலான 22 ஏக்கர் நிலத்தை அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தனது மனைவி, மகளை மிரட்டி மோசடியாக பத்திரப்பதிவு செய்துள்ளதாக அளித்துள்ள புகார்மீதானவழக்கைசிபிசிஐடி போலீசார்விசாரித்து

வருகின்றனர்.

இந்நிலையில் விஜயபாஸ்கர் உட்பட 3 பேர் மீது வாங்கல் போலீசார் கொலை மிரட்டல், மோசடி செய்தல் உட்பட 6 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். இதையடுத்து தொடர்ந்து தலைமறைவாக உள்ள விஜயபாஸ்கர் தரப்பில், இடைக்கால முன்ஜாமீன் கேட்டு கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 1ம்தேதி மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணைநேற்றுமதியம்நடந்தது. இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி சண்முகசுந்தரம், அதன்மீதான தீர்ப்பை அளிப்பதாக உத்தரவிட்டுள்ளார்.

மாநிலம் முழுவதும் மறியல் போராட்டம் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கைது

சென்னை, ஜூலை 5

தொடக்க கல்வித்துறையில் பணியாற்றும் 90 சதவீத ஆசிரியர்கள், குறிப்பாகபெண்ஆசிரியர்களின் பதவி உயர்வு மற்றும் முன்னுரிமை ஆகியவற்றை பாதிக்கும் வகையில் வெளியிட்டுள்ள பள்ளிக் கல்வித்துறை அரசாணை 243ஐ ரத்து செய்ய வேண்டும் என்று கோரி பல்வேறு கவன ஈர்ப்பு நடவடிக்கைகளை டிட்டோஜாக் மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கின் இறுதித் தீர்ப்பு வர உள்ள நிலையில், கவுன்சலிங்கை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும், அறிவிக்கப்பட்டுள்ள கவுன்சலிங் அட்டவணையை மாற்றி அமைத்து ஒன்றிய அளவில் மட்டும் கவுன்சலிங் நடத்த வேண்டும் என்றும் டிட்டோஜாக் அமைப்பு கோரியது. மேலும், ஆசிரியர்கள் உணர்வுகளை புறந்தள்ளி அரசாணை 243ஐ நடைமுறைப்படுத்தும்

வகையில் கவுன்சலிங்கை நடத்தினால் டிட்டோஜாக் அமைப்பு போராட்டத்தில் ஈடுபடும் என்றும் எச்சரித்தது.

இந்நிலையில், தொடக்கக் கல்வித்துறை அறிவித்தபடி, கடந்த இரண்டு நாட்களாக தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கான பணியிட மாறுதல் கவுன்சலிங்கை அரசு நடத்தி வருகிறது. இதையடுத்து டிட்டோஜாக் விடுத்த கோரிக்கை மீது அரசு மற்றும் தொடக்க கல்வித்துறை எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், அந்தந்த மாவட்டங்களில் பணியிட மாறுதல் கவுன்சலிங் நடக்கும் மையங்களிலும், சாலைகளிலும் டிட்டோஜாக் அமைப்பில் உள்ள தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் நேற்று மறியலில் ஈடுபட்டனர். மறியல் போராட்டத்தை அடுத்து மாவட்டங்களில் போலீசார் குவிக்கப்பட்டு, மறியலில் ஈடுபட்டவர்களை ஆங்காங்கே கைது செய்தனர்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

5.7.2024

ரூ.100 கோடி வசூலை கடந்த 'மகாராஜா'

இயக்குநர் நித்திலன் சாமிநாதன் இயக்கத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடித்த மகாராஜா திரைப்படம் கடந்த மாதம் 14ம் தேதி வெளியானது. விஜய் சேதுபதியின் 50வது படமாக உருவான இது, ரசிகர்கள் மற்றும் விமர்சகர்களிடையே பெரிய வரவேற்பைப்பெற்றுள்ளது. இந்தபடத்தில்அனுராக்காஷ்யப், மம்தாமோகன்தாஸ், நட்டி, முனிஷ்காந்த், சிங்கம் புலி, பாரதிராஜா, வினோத் சாகர், பி.எல்.தேனப்பன் உள்ளிட்ட பலர் நடித்து இருக்கின்றனர்.

படத்திற்குக் கிடைத்த பெரிய வரவேற்பால் பல திரையரங்குகளில் மகாராஜாவுக்கான காட்சிகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில், 'மகாராஜா' திரைப்படம் ரூ. 100 கோடி வசூலை கடந்துள்ளது என படக்குழு அறிவித்துள்ளது.

தனுஷுடன் இணைந்த ராஷ்மிகா மந்தனா

விஜய் நடித்த வாரிசு படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகி தற்போது தெலுங்கு, இந்தி திரை உலகில் முன்னணி நடிகையாக உருவெடுத்திருப்பவர் ராஷ்மிகா மந்தனா. ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சிக்கந்தர் என்ற படத்தில் ராஷ்மிகா சல்மானுக்கு ஜோடியாக நடிக்க இருக்கிறார்.

இந்நிலையில், தனுஷுடன் முதல் முறையாக ராஷ்மிகா இணைந்து நடிக்க உள்ளார். சேகர் கம்மூலா இயக்கத்தில் தனுஷ் நடித்து வரும் படம் குபேரா. இந்த படத்தில் ராஷ்மிகா நடித்து வருகிறார். படத்தில் ராஷ்மிகா மந்தனாவின் முதல் தோற்றம் 5ம் தேதி வெளியாகும் என படக்குழு சார்பில் அறிவிப்பு வெளியாகி உள்ளது.

அனிமல் படத்தின் வெற்றியை தொடர்ந்து இந்திய அளவில் பிரபலமடைந்த ராஷ்மிகா. குபேரா படத்தில் தனுஷுடன் இணைய இருப்பது தனுஷ் ரசிகர்களை உற்சாகப்படுத்தி உள்ளது.

எத்தனை முறை நான் செய்வது...? ரசிகரின் கேள்வியால் கோபப்பட்ட இந்தியன் 2 பட நடிகை

தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி படங்களில் நடித்து ரசிகர்களிடையே பிரபல நடிகையானவர் ரகுல் பிரீத் சிங். தமிழில் தடையற தாக்க மூலம் அறிமுகம் ஆன இவர், என்னமோ ஏதோ, தீரன் அதிகாரம் ஒன்று, தேவ், என்.ஜி.கே., அயலான் உள்ளிட்ட படங்களிலும் நடித்துள்ளார். நடிகை ரகுல் பிரீத் சிங், திரைப்பட தயாரிப்பாளர் ஜாக்கி பாக்னானி என்பவரை 2 ஆண்டுகளாக காதலித்து வந்த நிலையில், இரு வீட்டார் சம்மதத்துடன் கடந்த பிப்ரவரியில், கோவாவில் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. இவர்களுடைய திருமணத்தில் பாலிவுட் திரை பிரபலங்கள் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். ரகுல் ப்ரீத் சிங் திருமணத்திற்கு பின்னர், அதுபற்றிய புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகின. இந்த நிலையில், இன்ஸ்டாகிராமில் என்னிடம் எதுபற்றி வேண்டுமென்றாலும் கேளுங்கள் என்ற பெயரில் நிகழ்ச்சி ஒன்றை அவர் நடத்தினார்.

இதில், ரகுலின் ரசிகர்கள் அவரிடம் பல கேள்விகளை கேட்டனர். அவரும் சளைக்காமல் அதற்கு தனது பாணியில் பதில்களை வழங்கினார்.

இந்நிலையில், ரகுலுடைய தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய கேள்வி முறை வந்தது. அப்போது ஒரு ரசிகர் ஆர்வத்தில், திருமணம் பற்றிய உங்களுடைய திட்டம் என்ன? எப்போது உங்களுக்கு திருமணம் நடக்கும்? என கேட்டார். இதனை கேட்டு ஆச்சரியமடைந்த ரகுல், அது முன்பே நடந்து விட்டது. என்னை எத்தனை முறை அதனை செய்ய வைப்பீர்கள்? என்று சற்று ஆவேசத்துடன் கேட்டார்.

அதனுடன், ஜாக்கியுடன் ஒன்றாக இருக்கும் திருமண புகைப்படம் ஒன்றையும் அவர் பகிர்ந்து உள்ளார். இயக்குநர் ஷங்கரின் இயக்கத்தில் உருவாகி வரும் இந்தியன் 2 படத்தில் இவர் நடித்து இருக்கிறார். இப்படம் விரைவில் வெளியாக உள்ளது.

தமிழில் முதல் முறையாக விஜய் சேதுபதிக்கு ஜோடியாகும் 'மெர்சல்' பட நடிகை?

விஜய் சேதுபதி நடிப்பில் திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று வரும் திரைப்படம் 'மகாராஜா'. இத்திரைப்படம் விஜய் சேதுபதியின் 50வது படமாகும். இந்தபடத்தை நித்திலன் சாமிநான் இயக்கினார். விரைவில் இவர் நடித்துள்ள ஏஸ் திரைப்படம் வெளியாக உள்ளது.

இந்நிலையில், விஜய் சேதுபதி புதிய படத்தில் நடிக்க உள்ளார். இந்தபடத்தை இயக்குநர் பாண்டிராஜ் இயக்கவுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இது பாண்டிராஜ், விஜய் சேதுபதியை வைத்து இயக்கும் முதல் படமாகும். இதற்கு முன் பாண்டிராஜ் நடிகர் சூர்யாவை வைத்து இயக்கிய 'எதற்கும் துணிந்தவன்' படத்தை இயக்கினார். இப்படம் ரசிகர்களின் மத்தியில் கலவையான விமர்சனங்களை பெற்றது. இதற்கிடையில் விஜய் சேதுபதியின் புதிய படத்தில் கதாநாயகியாக நித்யா மேனனை நடிக்கவைக்கபேச்சுவார்த்தைநடந்துவருவதாகக்கூறப்படுகிறது. 'ஓகாதல்கண்மணி, மெர்சல், திருச்சிற்றம்பலம்' உள்ளிட்ட படங்களில் நடித்து ரசிகர்களின் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளார்.

இவர் இந்த படத்தில் நடிக்கும் பட்சத்தில் தமிழில் முதல் முறையாக விஜய் சேதுபதியுடன் நடிக்கும் படமாக இது அமையும். ஏற்கனவே இவர்கள் இருவரும் மலையாளத்தில் 19 (1) (ஏ) என்ற படத்தில் இணைந்து நடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூக வலைதளங்களில் வைரலாகும் சமந்தாவின் உடற்பயிற்சி

தென்னிந்திய திரை உலகில் முன்னணி நடிகையான சமந்தாவுக்கு தமிழ், தெலுங்கு திரை உலகில் ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். தமிழ் சினிமாவில் அறிமுகமாகி தெலுங்கு மொழியில் ஏராளமான படங்களில் நடித்து முன்னணி நடிகையாக திகழ்ந்தார். இந்நிலையில் நாகசைதன்யாவை காதலித்து திருமணம் செய்து கொண்டார் சமந்தா. பின்னர் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்தனர்.

இதையடுத்து மீண்டும் சினிமாவில் நடிக்க தொடங்கிய சமந்தா மயோடிசிஸ் என்ற அரியவகை நோயினால் பாதிக்கப்பட்டார். சிகிச்சைக்காக சினிமாவில் இருந்து ஓய்வெடுத்த சமந்தா ஆன்மீகம், உடற்பயிற்சி யோகா ஆகியவற்றில் தீவிர ஆர்வம் காட்டினார். நோயில் இருந்து மீண்டு வந்த சமந்தா புதிய படங்களில் நடிக்க தொடங்கி இருக்கிறார்.

இந்த நிலையில் ஆண்களுக்கு நிகராக உடற்பயிற்சி செய்யும் வீடியோவை சமந்தா வெளியிட்டுள்ளார். இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. உடற்பயிற்சி செய்யும் வீடியோ மூலம் அவரது உடல்நிலை பற்றிய வதந்தி தூள் தூளானது.

மலையாளத்தில் மம்மூட்டியுடன் ஒரு படத்திலும், ஷாருக்கானுடன் இந்தியில் புதிய படத்திலும் நடிக்க இருக்கும் சமந்தா விஜய் நடிக்கும் 69வது படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

'சூர்யா 44' : வெளியான புதிய அப்டேட்

நடிகர்சூர்யாவின்44வதுபடத்தை இயக்குனர்கார்த்திக்சுப்புராஜ்இயக்குகிறார் . இப்படத்தை சூர்யாவின் 2டி மற்றும் கார்த்திக் சுப்புராஜின் ஸ்டோன் பென்ச் நிறுவனம் இணைந்து தயாரிக்கின்றன. இப்படத்திற்கு இசையமைப்பாளர் சந்தோஷ்நாராயணன்இசையமைக்கிறார்.சூர்யாஇத்திரைப்படத்தில்இரட்டை வேடங்களில் நடிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. நடிகை பூஜா ஹெக்டே கதாநாயகியாக நடிக்கிறார். மேலும், இப்படத்தில் ஜெயராம், கருணாகரன், ஜோஜு ஜார்ஜ், மற்றும் சுஜித் ஷங்கர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இந்நிலையில், 'சூர்யா 44' படத்தின் புதிய அப்பேட் ஒன்று வெளியாகியுள்ளது அதன்படி, வருகிற 23ந் தேதி சூர்யாவின் 49வது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், ரசிகர்களுக்கு ஒரு சிறப்பு விருந்தளிக்க 'சூர்யா 44' படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் படத்தின் தலைப்பு ஆகியவை அறிவிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. இதனையடுத்து சூர்யா ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.

மருத்துவமனையில் ஷாலினி மனைவியை பார்க்க அஜர்பைஜானில் இருந்து வந்த அஜித்



நடிகர் அஜித் மற்றும் ஷாலினி தமிழ் திரையுலகில் நட்சத்திர தம்பதிகளாக உள்ளனர். இந்நிலையில், ஷாலினி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ள புகைப்படம் ரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. அதில் ஷாலினி, மருத்துவமனை கவுன் அணிந்து அஜித்குமாரின் கையை பிடித்தபடி இருக்கிறார்.இதனைபார்த்தரசிகர்கள்அதிர்ச்சியடைந்துள்ளனர். மேலும், ஷாலினி விரைவில் குணமடைய வேண்டும் என்று கருத்து பதிவிட்டு வருகின்றனர். ஷாலினிக்கு சென்னை மருத்துவமனையில் சிறிய அறுவை சிகிச்சை நடந்துள்ளதாகவும் தற்போது நலமாக இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. நடிகர் அஜித் அஜர்பைஜானில் தனது 'விடா முயற்சி' படப்பிடிப்பில் இருந்து மனைவியை கவனித்து கொள்ள சென்னை திரும்பியுள்ளார். விரைவில் ஷாலினிக்கு குணமானதும் மீண்டும் படத்தின் படப்பிடிப்பிற்காக அஜர்பைஜான் திரும்புவார் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

விம்பிள்டன் டென்னிஸ்: அல்காரஸ் 3வது சுற்றுக்கு முன்னேற்றம்



டென்னிஸ் போட்டியில் ஆண்டுதோறும் 4 வகையான கிராண்ட்ஸ்லாம் என்றஉயரியஅந்தஸ்துபெற்றடென்னிஸ்போட்டிகள்நடத்தப்படுகின்றன. இதில் மிகவும் கவுரவமிக்கதாக கருதப்படும் நூற்றாண்டு காலம் பழமையான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் ஸ்பெயின் வீரர் அல்காரஸ் ஆஸ்திரேலிய வீரர் அலெக்சாண்டர் வுகிச் ஆகியோர் மோதினர். பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய அல்காரஸ் 7(7)6(5), 6, 2, 6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 3வது சுற்றுக்கு முன்னேறினார்.

இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா இடையே முத்தரப்பு தொடர் ஆஸி. கிரிக்கெட் வாரியம் விருப்பம்

இந்தியாவும் பாகிஸ்தானும் இருதரப்பு தொடரை 2012 13க்குப் பிறகு ஆடவே இல்லை. இரு அணிகளும் ஐசிசி தொடர்களில் மட்டுமே சந்திக்கின்றன. இந்நிலையில் இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே முத்தரப்பு தொடரை நடத்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் விருப்பம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியத்தின் தலைமை செயல் அதிகாரி நிக் ஹாக்லி கூறியதாவது, இந்தியா பாகிஸ்தான் போட்டிகளுக்கு எப்போதும் நல்ல வரவேற்பு இருக்கும்.

இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா ஆகிய 3 அணிகளுக்கு இடையே முத்தரப்பு தொடர் நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இது தொடர்பான இறுதி முடிவு அந்த இரு நாடுகளின் கிரிக்கெட் வாரியங்களின் கையில் தான் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

3,500 வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் மாநில ஜூனியர் தடகள போட்டி சென்னையில் தொடக்கம்



தமிழ்நாடு தடகள சங்கம் சார்பில் 36வது மாநில ஜூனியர் ஓபன் தடகள சாம்பியன்ஷிப் போட்டி சென்னை நேரு ஸ்டேடியத்தில் நாளை (வெள்ளிக்கிழமை) முதல் 7ம் தேதி வரை 3 நாட்கள் நடக்கிறது. 4 வகையான வயது பிரிவில் இருபாலருக்கும் நடத்தப்படும் இந்த போட்டியில் மாநிலம் முழுவதும் இருந்து சுமார் 3,500 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறும் தொடக்க விழாவின் போது, உலக சாதனை முயற்சியாக 2,500 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்ளும் ஊக்கமருந்து எதிர்ப்பு உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்த தகவலை தமிழ்நாடு தடகள சங்க செயலாளர் சி.லதா தெரிவித்துள்ளார்.

விம்பிள்டன் டென்னிஸ்: ஆண்கள் இரட்டையர் பிரிவில் சுமித் நாகல் இணை தோல்வி

டென்னிஸ் போட்டியில் ஆண்டுதோறும் 4 வகையான கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற டென்னிஸ் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் மிகவும் கவுரவமிக்கதாககருதப்படும்நூற்றாண்டுகாலம்பழமையான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இந்த தொடரில் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர்பிரிவின்முதல்சுற்றுஆட்டம்ஒன்றில்இந்தியாவின் சுமித் நாகல் சொர்பியாவின் டுசான் லாஜோவிக் இணை, ஸ்பெயினின் பெட்ரோ மார்டினெஸ் ஜௌம் மூனார் இணையைஎதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில்ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய பெட்ரோ மார்டினெஸ் ஜௌம் மூனார் இணை 6 2, 6 2 என்ற நேர் செட் கணக்கில் இந்தியாவின் சுமித் நாகல் சொர்பியாவின் டுசான் லாஜோவிக் இணையை வீழ்த்தி 2வது சுற்றுக்கு முன்னேறியது.

ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப்: துருக்கி கால்இறுதிக்கு முன்னேற்றம்

17வது ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி ஜெர்மனியில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் இரவு லைப்ஜிக் நகரில் நடந்த நாக்அவுட் சுற்று ஆட்டம் ஒன்றில் (ரவுண்ட் 16) துருக்கி ஆஸ்திரியா அணிகள் மோதின.

ஆட்டம் தொடங்கிய 57வது வினாடியிலேயே துருக்கி அணி முதல் கோல் அடித்தது. கார்னர் வாய்ப்பில் கோல் எல்லையை நோக்கி அடிக்கப்பட்ட பந்தை ஆஸ்திரியா கோல் கீப்பர் பேட்ரிக் பென்ட்ஸ் தடுத்தார். அவரது கையில் பட்டு திரும்பிய பந்தை துருக்கி வீரர் மெரிக் டெமிரால் மின்னல் வேகத்தில் கோல் வலைக்குள் அனுப்பினார். ஐரோப்பிய சாம்பியன்ஷிப் வரலாற்றில் அடிக்கப்பட்ட 2வது அதிவேக கோல் இதுவாகும். 59வது நிமிடத்தில் மெரிக் டெமிரால் தலையால் முட்டி மீண்டும் கோலடித்தார். இதனால் துருக்கி அணி 2 0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

66வது நிமிடத்தில் ஆஸ்திரியாவின் மைக்கேல் கிரிகோரிட்ச் கோல் போட்டு பரபரப்பை உருவாக்கினார். கடைசி நிமிடத்தில் ஆஸ்திரியா வீரர் பாம்கார்ட்னர் தலையால் முட்டி கோல் வலையை நோக்கி திருப்பிய பந்தை துருக்கி அணியின் கோல்கீப்பர் மெர்ட் குனோக் அருமையாக தடுத்து தங்கள் அணியை காத்தார்.

முடிவில் துருக்கி அணி 2 1 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரியாவை வீழ்த்தி 3வது முறையாக கால்இறுதிக்குள் நுழைந்தது. இந்த ஆட்டத்தில் ஆஸ்திரியா ஆதிக்கம் செலுத்தியதுடன், அதிகமுறை கோல் வலையை நோக்கி ஷாட் அடித்தாலும் வெற்றி பெற முடியாமல் ஏமாற்றம் அளித்தது.

முன்னதாக நடந்த மற்றொரு ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன் நெதர்லாந்து 3 0 என்ற கோல் கணக்கில் ருமேனியாவை பந்தாடி 2008ம் ஆண்டுக்கு பிறகு முதல்முறையாக கால்இறுதியை எட்டியது. நெதர்லாந்து அணியில் கோடி காக்போ 20வது நிமிடத்திலும், மாற்று ஆட்டக்காரர் டோனில் மாலென் 83வது மற்றும் கடைசி நிமிடத்திலும் கோல் அடித்தனர். கால்இறுதியில் நெதர்லாந்து அணி, துருக்கியை சந்திக்கிறது.

இந்த போட்டி தொடரில் இன்று ஓய்வு நாளாகும். நாளை (வெள்ளிக்கிழமை) நடைபெறும் கால்இறுதி ஆட்டங்களில்ஸ்பெயின்ஜெர்மனி (இரவு 9.30மணி), போர்ச்சுகல்பிரான்ஸ் (நள்ளிரவு 12.30 மணி) அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.



சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்

விளக்கம்:

பயனில்லாத சொற்களை நல்ல பண்பு உடையவர் சொல்லுவாரானால், அவனுடைய மேம்பாடு அவர்க்குரிய மதிப்போடு நீங்கிவிடும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.